# பிற்சேர்க்கை D - தற்செயல் திட்டங்கள்

பொதுமக்களுக்கு சேவை செய்வதை மற்றும்/ அல்லது தேர்தலை துறை நடத்துவதைத் தடுக்கக்கூடிய அவசரநிலை அல்லது பிற நிகழ்வுகள் நடந்தால், தேர்தல்களின் போது முன்னெடுப்பதற்கான செயல்முறைகளை அமைப்பதே தற்செயல் திட்டத்தின் நோக்கம் ஆகும். அவசரநிலை உள்ள போது, இந்தத் துறையின் தேர்தல்களை நடத்துவதற்கான கடமையை ஆளுநர் மட்டுமே நிறுத்தி வைக்கலாம்.[1]

இந்த திட்டங்கள் மாநிலச் செயலாளரின் (SOS) அவசரநிலை திட்டத்துடன் இணைத்து செயல்படுத்தப்படலாம்.

ஒரு அவசரநிலையில் உருவாக்கப்பட்ட எச்சரிக்கை அளவை பொறுத்து, அவசரநிலைகளை எதிர்கொள்ளும் விதத்தை துறை தீர்மானிக்கிறது. எப்போதும்போல, சட்ட அமலாக்கம் அல்லது மருத்துவ உதவி தேவைப்படும் அவசரநிலை சூழ்நிலையை ஒரு ஊழியர் அறிந்தால், அவர்கள் எண் 911 ஐ அழைத்து தள மேற்பார்வையாளருக்குத் தெரிவிப்பார்கள்.

**நினைவிருக்கட்டும், தனிப்பட்ட பாதுகாப்பு என்பது அலுவலகத்தில் உள்ள எந்த ஆவணங்களை விடவும் அதிக முக்கியமானது.**

### முதலில் எடுக்கவேண்டியவை என்ன (வெளியேற்றுதல் வழக்கில்)

- அவ்வாறு செய்ய நேரம் இருந்து, அது தனிப்பட்ட பாதுகாப்பையும் பாதிக்காது என்றால், முக்கியத்துவத்தின் அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ள பின்வரும் பொருட்களை ஊழியர்கள் சேகரிக்கலாம் அல்லது பாதுகாக்கலாம்:
    1. வாக்குச்சீட்டுகள் (முதலில் வாக்களிக்கப்பட்டவை, மற்றவை இரண்டாவதாக)
    2. பணம் மற்றும் காசோலைகள் மற்றும் சில்லறை பணப்பெட்டி

### இன்றியமையாத மற்றும் பிற பதிவுகளின் பாதுகாப்பு மற்றும் மீட்பு (அவசரநிலை காலங்களில்)

- கீழே உள்ள உருப்படிகள் இன்றியமையாததாக மற்றும் அத்தியாவசிய பதிவுகளாகக் கருதப்படுகின்றன, மேலும் அவசரநிலையின் தன்மை மற்றும் விஸ்தீரணத்தை பொறுத்து முடிந்தால் கட்டிடத்திலிருந்து எடுக்கப்பட வேண்டும்.
    1. எண்ணப்பட்ட மற்றும் எண்ணப்படாத வாக்குச்சீட்டுகள்
    2. சேவையகங்கள்
    3. பிற மின்னணு தரவு சேமிப்பு

[1] GC§ 8571

4. வாக்காளர்களின் பட்டியல்
5. சில்லறை பணப்பெட்டியில் உள்ள பணம் மற்றும் காசோலைகள்

**கணினி பாதுகாப்பு**

- டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்களை பாதுகாப்பாக மூட நேரமில்லை என்றால், ஊழியர்கள் Ctrl+Alt+Delete ஐப் பயன்படுத்தி தங்கள் கணினியை பூட்டிவிட வேண்டும்.
- இதற்கு காரணம், பவர் பொத்தானை ஒரு முறை அழுத்துவது மட்டும் இணைப்பை துண்டித்து முழுமையாக மூட போதுமானதாக இருக்காது.
- மின்சாரம் இல்லையென்றால், கணினிகளைக் கையாளும் சிறந்த வழி தெரிவதற்காக, தொழில்நுட்ப சேவைகள் மற்றும் தீர்வுகள் (TSS) துறையின் வழிகாட்டுதலுக்காக ஊழியர்கள் காத்திருக்க வேண்டும்.

**எண்ணப்பட்ட மற்றும் எண்ணப்படாத வாக்குச்சீட்டுகள்**

- பொதுவாக, எண்ணப்பட்டாலும் படாவிட்டாலும், வாக்குச் சீட்டுகள் அந்தந்த தொகுதியில் வரிசைப்படுத்தப்பட்டு இறுதி சேமிப்பிற்குத் தயாராகும் வரை பாதுகாப்பான வாக்குச்சீட்டு அறையில் சேமிக்கப்படுகின்றன. வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்ட பிறகு, அவை தனி பாதுகாப்பான இடத்தில் சேமிக்கப்படும். எண்ணப்படாத வாக்குச்சீட்டுகள் அவற்றின் நிலைக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டு சேமிக்கப்படுகின்றன:
    1. வாக்குச்சீட்டுகள் இன்னும் உறைக்குள் உள்ளன, வரிசைப்படுத்தப்படவில்லை, மற்றும் கையெழுத்து சரிபார்க்கப்படவில்லை
    2. வாக்குச்சீட்டுகள் இன்னும் உறைக்குள் உள்ளன, தொகுதிவாரியாக வரிசைப்படுத்தப்பட்டு, மற்றும் கையெழுத்து சரிபார்க்கப்பட்டவை
    3. வாக்குச்சீட்டுகள் உறைக்கு வெளியே எடுக்கப்பட்டு மற்றும் தொகுதி எண்ணுடன் உள்ள பெட்டிகளில் உள்ளன
- **<u>குறிப்பு</u>:** வாக்குச்சீட்டுகள் கையெழுத்து சரிபார்ப்புக்காக ஒரு பணிநிலையத்தில் அல்லது வாக்குச்சீட்டு தேர்வு அறையில் தற்காலிகமாக வைக்கப்படலாம்.
- ஊழியர்கள் கட்டிடத்திலிருந்து வாக்குச்சீட்டை அகற்ற தேவைப்படும் அவசரநிலை ஏற்பட்டால், ஊழியர்கள் பெட்டிகளை அல்லது தொட்டிகளை டேப் மூலம் கட்டி புதிய இடத்திற்கு இடமாற்றி விட வேண்டும்.
- அவற்றை கட்டிடத்திலிருந்து இடமாற்ற முடியாவிட்டால், பாதுகாப்பான அறைகளில் ஒன்றில் வாக்குச்சீட்டுகள் வைக்கப்படும்.

- அகற்றுவதற்கு நேரமில்லை என்றால், வெற்றாக உள்ள, வழங்கப்படாத வாக்குச்சீட்டுகளை விட்டுவிட வேண்டும். நேரம் இருந்தால், வெற்றாக உள்ள, வழங்கப்படாத வாக்குச்சீட்டுகளை என்ன செய்யவேண்டும் என்று வாக்காளர்களின் பதிவாளர் (ROV) அல்லது நியமிக்கப்பட்டவர் ஊழியர்களுக்கு அறிவுறுத்துவார்.

**வாக்காளர்களின் தகவல் வரலாறு புதுப்பித்தலில் இடையூறு அல்லது இணைப்பு இழப்பு**

- வாக்களிப்பு மைய தலைவர் பிரதான ROV அலுவலகத்திற்கு தெரிவிப்பார்.
- இடையூறு ஒரு குறிப்பிட்ட வாக்கு மையத்தில் மட்டுமே இருந்து, அது 30 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தால், அல்லது வாக்காளர்களின் அளவைப் பொறுத்து ஏதேனும் குறிப்பிடத்தக்க நேரம் வரை நீடித்தால், வாக்காளர்கள் மற்றொரு வாக்கு மையத்திற்கு அனுப்பப்படுவார்கள் அல்லது தற்காலிகமாக வாக்களிக்கும் வாய்ப்பை பெறுவார்கள்.
- இடையூறு கவுண்ட்டி முழுவதும் ஏற்பட்டிருந்தால், மற்றும் ஊழியர்களால் வாக்காளரின் சரியான வாக்குச்சீட்டு வகை அல்லது தொகுதியை தீர்மானிக்க முடிந்தால். வாக்களிப்பு மைய ஊழியர்கள் மின்னணு வாக்குப்பதிவு உபகரணங்கள் மூலம், முடிந்தால், தற்காலிக உறைகளில் தற்காலிக வாக்குச்சீட்டுகளை வழங்கலாம்.
- கணினி மீண்டும் இயங்க தொடங்கியதும் EIMS இல் உள்ளிடுவதற்காக, அனைத்து வாக்காளர்களின் காகித பதிவுகளையும் மற்றும் தகவல்களையும் வைத்திருக்கவும்.
- வாக்களிப்பு சிஸ்டம்ஸ் பிரிவு விற்பனையாளர் (களை) உடனே தொடர்புகொண்டு சிக்கலை முடிந்தவரை விரைவில் தீர்ப்பார்.

**மின் தடை**

- வாக்களிப்பு மைய தலைவர் முக்கிய ROV அலுவலகத்திற்கு தெரிவிப்பார்.
- மின் தடை 15 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தால், வாக்காளர்கள் மற்றொரு வாக்கு மையத்திற்கு அனுப்பப்படுவார்கள்.
- வலைத்தளம், தொலைபேசி செய்தி, செய்தி, வானொலி, சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

**கொந்தளிப்பான வானிலை**

- வாக்களிப்பு மைய தலைவர் முக்கிய ROV அலுவலகத்திற்கு தெரிவிப்பார்.

- வானிலை காரணமாக ஒரு வாக்கு மையத்தை அணுக முடியாத நிலை அல்லது அது பாதுகாப்பற்றதாக இருந்தால், காப்பாக உள்ள வாக்கு மையத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு, உடனடியாக பயன்படுத்துகிற மாதிரி அது தயாரிக்கப்படும்.
- வலைத்தளம், தொலைபேசி செய்தி, செய்தி, வானொலி, சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

## தீ அல்லது பிற பேரழிவு

- அனைத்து ஊழியர்களும் வாக்காளர்களும் முதலில் பாதுகாப்பாக வெளியேற்றப்பட வேண்டும்.
- வாக்களிப்பு மைய தலைவர் முக்கிய ROV அலுவலகத்திற்கு தெரிவிப்பார்.
- நேரம் அனுமதித்தால், வாக்கு மைய ஊழியர்கள் பின்வருவனவற்றை வரிசைப்படி செய்வார்கள்:
    1. வைக்கப்பட்டிருக்கும் இடத்திலிருந்து வாக்களிக்கப்பட்ட அனைத்து வாக்குச்சீட்டுகளையும் பாதுகாப்பாக அகற்றுவார்கள் (அஞ்சல் மூலம் வாக்களிப்பு வாக்குச்சீட்டுகள், உபகரணங்களிலிருந்து மெமரி கார்டுகள், கருப்பு வாக்குச்சீட்டு பெட்டியிலிருந்து காகித வாக்குச்சீட்டுகள் மற்றும் நிபந்தனை வாக்காளர் பதிவு வாக்குச்சீட்டுகள்)
    2. தேர்தல் தகவல் மேலாண்மை அமைப்பை (EIMS) அணுகும் அனைத்து கணினிகளையும் பாதுகாப்பாக வைப்பார்கள்/அணைத்து விடுவார்கள்
    3. அனைத்து வாக்களிக்கும் உபகரணங்களையும் பாதுகாப்பாக வைப்பார்கள்/மூடுவார்கள்
    4. முடிந்தால், ஏதாவது கணினிகள்/உபகரணங்களை அகற்றுவார்கள்.
- பிரதான ROV அலுவலகம் வலைத்தளம், தொலைபேசி பதிவு, செய்தி, வானொலி, சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பார்கள், மேலும் மாற்று வாக்கு மையங்களைப் பற்றி மக்களுக்கு தெரிவிப்பார்கள்.
- மாற்று வாக்களிப்பு மையம் முடிந்தவரை விரைவில் அமைக்கப்படும்.

## வாக்களிப்பு கருவியின் செயலிழப்பு

- வாக்கு மைய தலைவர் பிரச்சினையை தீர்க்கும் சமயத்திலேயே, வாக்காளர்களுக்கு காகித வாக்குச்சீட்டுகளை வழங்க முடியும்.

- வாக்களிப்பு மைய கையேட்டில் வழங்கப்பட்ட சரிசெய்தல் வழிமுறைகளை வாக்கு மைய தலைவர் பின்பற்றுவார்.
- பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால், வாக்கு மைய தலைவர் பிரதான ROV அலுவலகத்தை தொடர்பு கொள்வார்.
- தொழில்நுட்ப ஆதரவை அனுப்புவது அல்லது மாற்று உபகரணங்களை அனுப்புவது போன்ற பொருத்தமான நடவடிக்கைகளை ROV எடுப்பார்.

**பேலட் ஆன் டிமாண்டு உபகரணம் வேலை செய்யவில்லை என்றால்**

- ஊழியர்களுக்கான வாக்களிப்பு மைய கையேட்டில் வழங்கப்பட்ட சரிசெய்தல் வழிமுறைகளை வாக்கு மைய தலைவர் பின்பற்றுவார்.
- பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால், வாக்கு மைய தலைவர், ROV அலுவலகத்தைத் தொடர்புகொண்டு, வாக்குச் சாவடியின் காப்பு தொகுப்பிலிருந்து பேலட் ஆன் டிமாண்டு இயந்திரம் அனுப்பப்படுவதை கவனிப்பார்.
- பேலட் ஆன் டிமாண்டு இயந்திரங்கள் இன்னும் இயங்கவில்லை என்றால், வாக்களிப்பு மையங்களில் வாக்குச்ச்சீட்டை குறிக்கும் சாதனங்கள் பயன்படுத்தப்படும்.
- வாக்களிப்பு மையத்தில் மின் தடை ஏற்பட்டால், வாக்களிக்கும் பணியில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க ஒரு ஜெனரேட்டர் பயன்படுத்தப்படும்.
- ஜெனரேட்டர்களைப் பயன்படுத்திய பின்னரும் மின் தடை தொடர்ந்தால், முன் அச்சிடப்பட்ட தற்செயல் வாக்குச்சீட்டு வகைகள் வாக்காளர்களுக்கு வழங்கப்படும்.
- முன்-அச்சிடப்பட்ட தற்செயல் வாக்குச்சீட்டுகள் தீர்ந்துவிட்டால், கடைசி தற்செயல் வாக்குச்சீட்டின் அடிப்படையில் கையால் எழுதப்பட்ட வாக்குச்சீட்டுகளை ROV ஏற்றுக் கொள்ளும்.

**இணைய இணைப்பில் தோல்வி**

- ஊழியர்களுக்கான வாக்களிப்பு மைய கையேட்டில் வழங்கப்பட்ட சரிசெய்தல் வழிமுறைகளை வாக்கு மைய தலைவர் பின்பற்றுவார்.
    - பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால், வாக்கு மைய தலைவர் பிரதான ROV அலுவலகத்தை தொடர்பு கொள்வார்.
    - வாடிக்கையாளர் ஆதரவுக்காக கவுண்ட்டி தகவல் சேவைகளை அல்லது இணைய வழங்குநரைத் தொடர்புகொள்வது போன்ற பொருத்தமான நடவடிக்கைகளை ROV எடுப்பார்.

- இணைய நிறுத்தம் 15 நிமிடத்திற்கு மேலாக நீடித்தால், வாக்களிப்பு மைய ஊழியர்கள், முடிந்தால், மின்னணு வாக்குப்பதிவு உபகரணங்கள் மூலம், தற்காலிக உறைகளில் தற்காலிக வாக்குச்சீட்டுகளை வழங்கலாம்.
- தேர்தல் ஊழியர்கள் முக்கிய ROV அலுவலகத்தில் உள்ள EIMS இல் உள்ளிடுவதற்காக, வாக்களிப்பு மைய ஊழியர்கள் அனைத்து வாக்காளர்களின் காகித பதிவுகளையும் தகவல்களையும் வைத்திருப்பார்கள்.
- இணைய நிறுத்தம் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்தால், அல்லது வாக்காளர்களின் அளவைப் பொறுத்து ஏதேனும் குறிப்பிடத்தக்க நேரம் வரை நீடித்தால், வாக்காளர்கள் மற்றொரு வாக்கு மையத்திற்கு அனுப்பப்படுவார்கள். ROV வலைத்தளம், தொலைபேசி செய்தி, செய்தி, வானொலி, சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

**பயன்படுத்த முடியாத வாக்கு மையம்**

- ஒரு வாக்கு மையத்தை ஏதோ காரணத்தால் பயன்படுத்த முடியாது என்றால், வாக்கு மைய தலைவர் அதை பிரதான ROV அலுவலகத்திற்கு அறிவிப்பார்.
- பயிற்சி பெற்ற மாற்று ஊழியர்களின் பட்டியல் பிரதான ROV அலுவலகம் மூலம் பராமரிக்கப்படும்.
- புதிய வாக்களிப்பு மையத்தை இடம் மாற்றுவதற்கும் அமைப்பதற்கும் வாக்களிப்பு மைய ஊழியர்களுக்கு தேர்தல் லாஜிஸ்டிக்ஸ் அதாவது ஏற்பாட்டியல் ஊழியர்கள் உதவுவார்கள்.
- ROV வலைத்தளம், தொலைபேசி செய்தி, செய்தி, வானொலி, சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் மூலம் இட மாற்றம் குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

**காப்பாக உள்ள வாக்கு மையங்கள்**

- தேர்தல் தேதிவரை தாமதித்து ROV மாற்று வாக்களிப்பு மையத்தை ஒதுக்கலாம்.
- புதிய வாக்கு மையம் அசல் வாக்கு மையத்திற்கு முடிந்தவரை அருகில் இருக்க வேண்டும், மேலும் புதிய தளத்திற்கு வாக்காளர்களை வழிநடத்தும் ஒரு அறிவிப்பு அசல் தளத்தில் ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

**அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு (எச்சரிக்கை தீவிரம் #1)**

ROV அல்லது சட்ட அமலாக்கம் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டால், ROV, பொருந்தும்போது, அவசரநிலை சேவைகள் இயக்குநரின் அலுவலகத்தில் பின்வரும் அனுமதிகளை கோரலாம்:

- வாக்காளர்கள் வாக்களிக்க கட்டிடத்திற்குள் நுழைந்து வெளியேறுவதற்கு;

- ஊழியர்கள் வாக்குச் சீட்டுகளை எண்ணுவதை தொடர; அல்லது
- வழக்கமான வணிகத்தை நடத்த பொதுமக்கள் நுழைய.

**பொதுமக்கள் மற்றும் பணியாளர்களை வெளியேற்றுதல் (எச்சரிக்கை தீவிரம் #2)**

மேலே விவாதிக்கப்பட்ட நிலையான மற்றும் அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் கூடுதலாக வெளியேற்றுதலுக்காக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் பின்வரும் நடவடிக்கைகளை அமல்படுத்தலாம்:

- அலாரம் ஒலித்தால் மிக அருகிலுள்ள வெளியேறும் வழியாக அமைதியான முறையில் உடனடியாக வெளியேறுமாறு பொதுமக்களிடம் தெரிவிக்க வேண்டும்.
- ஊனமுற்றோர் அல்லது வெளியேறுதல் உதவி தேவைப்படுபவர்கள் உட்பட அனைத்து பொதுமக்களுக்கும் உதவ வேண்டும்.
- கதவுகளை பூட்டி இன்றியமையாத பதிவுகள் மற்றும் வாக்குச்சீட்டுகளை பாதுகாக்க வேண்டும்.
- ஒதுக்கப்பட்ட சந்திப்பு இடத்திற்குச் சென்று ஒன்றாக இருக்க வேண்டும்.
- ROV ஒரு மாற்று தளத்தை அங்கீகரிப்பார்.
- அவசரநிலை செய்திகளை குரல்-அஞ்சலில் அனுப்பவும் மற்றும் கட்டிடத்தில் ஒட்டவும்.
- முடிந்தால், மாற்று தளத்திற்கு துறை தொலைபேசி இணைப்புகளை திசை திருப்பவும்.
- கட்டிடத்தின் நிலையை, கட்டிடத்தில் இல்லாத ஊழியர்களுக்கு செல்ஃபோன் வழியாக தெரிவிக்கவும்.
- முன்-நியமிக்கப்பட்ட ஊழியர்கள் ஒவ்வொரு மாடியையும் சரிபார்த்துவிட்டு, வெளியேறிய பின் கதவுகளை மூடுவார்கள்.

**தேர்தல் நாளில் வெளியேற்றுதல்கள்**

தேர்தல் தேதியன்று துறையின் வெளியேற்றுதல் நடந்தால், மேலே குறிப்பிட்டதுடன் கூடுதலாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்:

- வாக்குச் சீட்டை செயல்படுத்துவதை உடனடியாக நிறுத்துவதோடு, வாக்குச் சீட்டு அறை மற்றும் எண்ணும் அறைக்கான கதவுகளைப் பூட்டுவதன் மூலம் வாக்குச் சீட்டுகளையும் அட்டவணைப்படுத்தல் உபகரணங்களையும் பாதுகாக்கவும். வரிசைப்படுத்தப்படாத வாக்குச்சீட்டுகள் ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட அறையில் சேமிக்கப்பட்டுள்ளன.
- கையெழுத்து சரிபார்ப்புக்கான பணிநிலையங்களில் உள்ள வாக்குச்சீட்டுகள் பாதுகாப்பான வாக்குச்சீட்டு அறையில் வைக்கப்படும்.

- அப்போது தான் பெற்ற, ஆனால் இன்னும் வரிசைப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படாத வாக்குச்சீட்டுகள், ஏற்கனவே பாதுகாக்கப்பட்ட வாக்குச்சீட்டு அறையில் சேமிக்கப்பட்டுள்ளன.
- ஏதாவது வாக்காளர் இருந்தால், அவசரநிலைக்கு மிகவும் பொருந்தும் வகையில், வாக்களிக்கும் இடத்தின் மாற்று இடத்தைப் பற்றி வாக்காளர்களுக்கு தெரிவிக்கவும்.
- கவுண்ட்டி முழுவதும் மாற்று டிராப்-பாக்ஸ் கிடைக்கும் இடங்களை பற்றி கட்டிடத்தில் ஒட்டவும்.

## ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்கு மையங்களை பாதிக்கும் அவசரநிலைகள்

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வாக்கு மையங்களை பாதிக்கும் அவசரநிலை ஏற்பட்டால், இடமாற்றம் மற்றும்/அல்லது வாக்கு மையங்களை ஒருங்கிணைத்தலும் தேவைப்படலாம். இத்தகைய சூழ்நிலைகளில், பின்வரும் நடைமுறைகளை தேர்தல் அதிகாரிகள் பின்பற்ற வேண்டும்.

- வாக்காளர்களை புதிய தளங்கள் மற்றும் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் உள்ள இடங்களுக்கு அனுப்ப, இடமாற்றத்தை பற்றி அறிவுறுத்தும் அடையாளக் குறிகளை ஒட்டவும்.
- வாக்களிக்கப்பட்ட அனைத்து வாக்குச்சீட்டுகளையும் சேகரித்து, முடிந்தால், சுயமாக- சீல் ஆகும் பைகளில் பாதுகாக்கவும்.
- வாக்குச்சீட்டு பெட்டி, வாக்களிக்கப்படாத வாக்குச்சீட்டுகள் மற்றும் வாக்காளர்களின் பட்டியலை சேகரித்து புதிய இடத்திற்கு அனுப்பவும்.
- குறைந்தது இரண்டு தேர்தல் அதிகாரிகள், அல்லது ஆய்வாளர்கள், ஒவ்வொரு வாக்கு மையத்திலிருந்தும் எல்லா நேரங்களிலும் வாக்குச்சீட்டுகளுடன் இருக்க வேண்டும், மேலும் வாக்குச்சீட்டுகள் புதிய வாக்கு மைய இடங்களுக்கு பாதுகாப்பாக மாற்றப்படுவதை கண்காணிக்க வேண்டும்.
- முடிந்தால், தேவையான புதிய சீல்களை துறை வழங்கும்.

## களத்தில் சேகரிப்பு வழிகள் அல்லது பணியாளர்களை பாதிக்கும் அவசரநிலைகள்

களத்தில் சேகரிப்பு வழிகளை அல்லது ஊழியர்களை பாதிக்கும் அவசரநிலை ஏற்பட்டால், துறை ஊழியர்கள் தளத்தின் நிலைமை குறித்து களத்தில் உள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.

## அதிகார ஒப்படைப்பு

அவசரநிலை ஏற்பட்டால், ROV துறை சார்ந்த நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து முடிவுகளையும் எடுப்பார். முடிவுகளை எடுக்க ROV இல்லை என்றால், முழு அதிகாரமும் உதவி ROV (களுக்கு) க்கு

மாற்றப்படுகிறது. முடிவுகளை எடுக்க இருவருமே இல்லை என்றால், இருப்பதிலேயே மிக மூத்த ஊழியருக்கு அதிகாரம் மாற்றப்பட வேண்டும்.

ஒரு பாதுகாப்பான இடத்திற்கு சென்றதும், ROV மற்றும் அவர் நியமித்த ஊழியர்கள் சந்தித்து சேத மதிப்பீட்டைச் செய்ய வேண்டும், முடிந்தால், கணினி மீட்பைத் தொடங்க வேண்டும், மேலும் அவசரநிலையின் தன்மையின் அடிப்படையில் எந்த நடவடிக்கைகளை தொடர்ந்தாக வேண்டும் அல்லது எவற்றை தொடரலாம் என்பதை தீர்மானிக்க வேண்டும். இந்த சந்திப்பின் முடிவு கைப்பேசி மற்றும் வீட்டு எண்கள் மூலம் ஊழியர்களுக்கு தெரிவிக்கப்படும்.

## அவசரநிலை காலத்திலும் அதற்குப் பின்னரும் நடக்கும் செய்தித் தொடர்பு

பொதுவாக, துறைத் தலைவர் ஒரு வெளியேற்றுதலை தொடங்குவது குறித்து ஒரு அறிவிப்பை வெளியிடுவார். அமைதியாக, வரிசையாக எங்கிருந்து வெளியேற வேண்டும் என்பதும், ஒவ்வொரு வெளியேற்றுதல் நெறிமுறைக்கும் எங்கு சந்திக்க வேண்டும் என்பதும் அனைத்து அலுவலக ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவுறுத்தப்படும்.

அவசரநிலை காலத்திலோ அல்லது அதற்கு பின்னரோ ஊழியர்களுடன் தொடர்புகொள்ள துறையில் பின்வரும் முறைகள் பயன்படுத்தப்படும்:

- கைப் பேசிகள்
- துறையின் குரல் அஞ்சல்
- உரைச் செய்தி
- வீட்டு தொலைபேசிகள்

பாதுகாப்பு அதிகாரிகள் கட்டிடம் முழுவதிலும் பார்த்த பின்னர் வெளியேற்றுதல் இடத்தில் வருகைப் பதிவை சரிபார்ப்பார்கள். அனைத்து ஊழியர்களும் கணக்கில் வந்ததுமே, தளத்தில் உள்ள எந்த அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்படும். இருப்பினும், வருகைப்பதிவு அழைப்பின் போது ஒரு குழு உறுப்பினர் கணக்கில் வராவிட்டால், அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கப்படும். பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் அல்லது நிர்வாகம் மீண்டும் நுழைவதற்கான நிலை மற்றும் சாத்தியம் குறித்து ஊழியர்களிடம் தெரிவிப்பார்.

## முன்-பதிவுசெய்யப்பட்ட செய்தி

அவசரநிலை செய்தியின் உள்ளடக்கங்கள் அவசரநிலையின் தன்மையை அடிப்படையாகக் கொண்டவை. தேர்தல் தேதியன்று அவசரநிலை ஏற்பட்டால், செய்திகள் புதுப்பித்த நிலையில் இருப்பதையும், புதிய வாக்களிப்பு தளங்களை பற்றிய வெளிச்செல்லும் செய்திகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவதையும் உறுதி செய்வது நிர்வாக சேவை மேலாளரின் பொறுப்பாகும்.

**புதிய பணியாளருக்கான அறிமுகப்பயிற்சி**
புதிய பணியாளர்களுக்கு இந்தக் கொள்கையின் உள்ளடக்கங்கள் குறித்து அவர்களின் மேற்பார்வையாளர் மூலம் தெரிவிக்கப்படும். அனைத்து ஊழியர்களும் வெளியேற்றுதல் வழிகள் மற்றும் சந்திப்பு தளங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

**துறை ஊழியர்களுக்கான பயிற்சி உத்தி**
அடிப்படை பாதுகாப்பு மற்றும் அவசரநிலை தகவல்கள் மற்றும் இந்த திட்டத்தின் நகலை உள்ளடக்கிய ஒரு வழிகாட்டி புத்தகத்தை துறை பராமரிக்கிறது.

இந்த வழிகாட்டி ஒவ்வொரு தேர்தலுக்கும் முன்னர் மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படும். இறுதி வழிகாட்டி தேர்தல் தேதிக்கு 120 நாட்களுக்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும்.